பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண் 17/1992, நிறைவேற்றப்பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(ஐ) மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1992), மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1992) @ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர்கள் அடுத்த சட்டமுன்வடிவின் மீதும் தங்கள் கருத்துக்களைச் சேர்த்துச் சொல்லலாம். இரண்டுமே சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. பேசும்போது இரண்டையுமே சேர்த்துப் பேசிவிடலாம். திரு. எச். எம். ராஜு.

*திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரி விதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு மற்றும் தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (இரண்டாம் திருத்த,சட்ட முன்வடிவு ஆகியவற்றில் பேசுவதற்கு வாய்ப்பு கொடுத்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்து என்னுடைய ஓரிரு கருத்து க்களைக் கூற விரும்புகிறேன்.

வாகனங்களுக்கு எஃப்.சி. வாங்கும்போது வரிகட்டினால்தான் எஃப்.சி. கொடுக்கப்படும் என்றிருக்கும் நிபந்தனையை இன்னும் தளர்த்தி 60 நாட்களுக்குள் கொடுக்கலாம் என்று கொடுத்தால் நலமாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

வாகனங்களுக்கு வரி கட்டும்போது மாத கடைசியில் ஒட்டு மொத்தமாக ஊர்தியின் சொந்தக்காரர்கள் கட்டுகிறார்கள். அதனால் காலதாமதம் மற்றும் வேலைப்பளுவும் அதிகமாக ஆகிறது. இதைத் தவிர்க்க வழிவகை செய்யவேண்டுமென்றுதான் கோருகிறேன்.

அடுத்து வங்கிகள் மூலமாக வாகன வரிகள் வாங்கும்போது சில வங்கிகள் மூலமாகத்தான் இந்த வரிகள் வாங்கப்படுகின்றன. அதனால் எல்லா தேசிய வங்கிகள் மூலமாகவும் இந்த வரிகளை வாங்கலாம் என்ற கருத்தைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

@ 24-4-1992 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

ஆர். சி. புத்தகங்கள் உடனுக்குடன் மக்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தால் மிகவும் நல்லது என்ற கருத்தையும் நான் கூற விரும்புகிறேன்.

வாகன வரிகளுடன் இன்சூரன்ஸ் பணத்தையும் மேற்படி வங்கிகள் வாங்கினால் மக்களுக்கு நலமாக இருக்கும், சுலபமாகவும் இருக்கும் என்ற கருத்தைச் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

மோட்டார் சைக்கிள், மொப்பட் போன்றவற்றிற்கு லைசன்ஸ் வழங்குவதில் ஸ்ட்ரிக்ட்-ஆக இருக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். காரணம் என்னவென்றால் சில 15, 16 வயதுடைய மாணவர்கள்கூட இதை வாங்கி அவர்கள் ஓட்டுகிறார்கள். இதன்மூலமாக விபத்துக்கள் நேரிடுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கிறது. ஆக அவைகளை எல்லாம் தவிர்க்க வேண்டுமென்று கேட்டு இந்தச் சட்டமுன்வடிவுகளில் பேச வாய்ப்புக் கொடுத்த தங்களுக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். ஜெய் ஹிந்த்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரி விதிப்பு திருத்தச் சட்டமுன்வடிவு மீது சில கருத்துக்களை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் காட்டி இருக்கிறார்கள். இந்தச் சட்ட முன் வடிவைப் பொறுத்தவரையில் அண்மையில் மத்திய அரசு இரண்டு சக்கர வாகனங்களுக்கு அதாவது மோட்டார் சைக்கிள்களைப் பொறுத்த வரையில் அவற்றின் திறன் என்று சொல்லப்படும் அந்த கெப்பாசிட்டி அடிப்படையில் சீரமைத்துள்ளது. அதன் காரணமாக மோட்டார் சைக்கிள்களின் மீது விதிக்கப்படும் எக்ஸைஸ் தீர்வை, ஆயத்தீர்வை மாற்றியமைக்கப்பட்டு உள்ளது. அந்த அடிப்படையில்தான் தமிழ்நாட்டிலும் நாம் வரி விதிப்பைத் திருத்தியமைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் நிதிநிலை அறிக்கையில் மோட்டார் வாகனங்களுக்கான வரி விதிப்பில் சில மாற்றங்கள் அறிவிக்கப்பட்டன.

பிற்பகல் 6—30.

அந்த அறிவிப்பின்படி 50 சிசி. இருக்கின்ற வாகனங்களுக்கு, நம் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு ஏறத்தாழ அதற்கு மட்டும் 4,68,801 பேர்களுக்கு வரிவிதிப்பே இல்லை என்ற நிலையை உருவாக்கி, அதனாலே அரசுக்கு ரூபாய் 7 கோடியே 45 ஆயிரம்

இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். அதே போல, 50 சி.சி.யிலிருந்து 170 சி.சி. வரையிலும் ரூ. 105 வரிவிதிப்பு வாகனங்களுக்கு இருந்திருக்கிறது. அதேபோல 170 சி.சி. யிலிருந்து 300 சி.சி. வரைக்கும் 200 ரூபாய், 300 சி.சி. க்கு மேலே 300 ரூபாய் என்று இருந்தது தற்போது மாற்றி 50 சி.சி. வரையிலும் வரிவிதிப்பு ஏதும் இல்லை, 50 சி.சி.க்கு மேலே 75 சி.சி. வரையிலும் வாகனங்களுக்கு இனி 125 ரூபாய் வரி, 75 சி.சி. யிலிருந்து 170 சி.சி. வரையிலும் வாகனங்களுக்கு 180 ரூபாய் வரி, 170 சி.சி.க்கு மேலே உள்ள மற்ற அனைத்து வாகனங்களுக்கு இனிமேல் 210 ரூபாய் வரி என்று மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அடுத்து சுமை ஏற்றப்படாத நிலையில் உள்ள 700 கிலோ கிராம் எடையுள்ள குறைந்த எடை மோட்டார் வாகனங்களுக்கு பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்தி மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள நிலை, ஆண்டுக்கு வரிவிதிப்பு 900 என்று இருந்தது, திருத்தப்பட்ட பின்பு 1,200 ரூபாய் ஆக மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே தயாரிக்கப்பட்டு நிறுவனங்களால் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களுக்கு தற்போது 600 ரூபாய் ஆக இருந்தது 800 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டு நிறுவனங்களால் பயன்படுத்தப்படாமல் தனியாரால் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களுக்கு 300 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக திருத்தி அமைக்கப்படுகிறது என்பதை இதன் மூலமாகத் தெரிவித்து, இதனால் அரசுக்கு ஏறத்தாழ 20 இலட்சம் ரூபாய் அரசுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும்கூட இந்த மாற்றத்தை இந்த அரசு செய்திருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த சட்ட முன்வடிவை ஆதரித்து, திருத்தங்களைத் திரும்பப்பெற்று, நிறைவேற்றித் தரவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ‘‘ ஆம் ’’ என்க. (ஆம்)

மறுப்போர் ‘‘ இல்லை’’ என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது,

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகனங்கள் (இயக்கூர்திகள்) வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 30/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் " ஆம் " என்க. (ஆம்)

மறுப்போர் " இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

TRUTH ALONE TRIUMPHS